1972 நவம்பர் 13]

மாண்புமிகு திரு செ. மாதவன் : 1. தனி நபர்களுக்கு.

வருடம்.		நபர்களின் எண்ணிக்கை.	அளிக்கப்பட்ட தொகை. (ரூபாய் லட்சத்தில்.)
1969	..	1732	95·17
1970	..	1760	92·51
1971	..	1830	97·88

2. கூட்டுறவு சங்கங்களுக்கு—ஏதும் வழங்கவில்லை

3. தனிப்பட்ட நிறுவனங்களுக்கு.

வருடம்.		நிறுவனங்களின் எண்ணிக்கை.	அளிக்கப்பட்ட தொகை. (ரூபாய் லட்சத்தில்).
1969	..	349	40·51
1970	..	427	47·74
1971	..	432	50·29

Employment Exchanges

*282 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the total number of unemployed in the Live Registers of the Employment Exchanges in the State during the years 1968 to 1971;

(*b*)whether the number is on the increase; and

(*c*) if so, the action proposed to be taken by the Government in this regard?

வேலை வாய்ப்பு அலுவலகங்கள்

திரு ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இம்மாநிலத்திலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களின் பதிவேடுகளில் 1968-ம் ஆண்டு முதல் 1971-ம் ஆண்டு வரை வேலை அளிக்கப்படாமலுள்ளோரின் மொத்த எண்ணிக்கை யாது ?

(இ) அந்த எண்ணிக்கையானது பெருகி வருகிறதா ?

(உ) ஆமெனில், இது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1972 நவம்பர் 13

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) தமிழ்நாட்டில் 1968 முதல் 1971 முடியவுள்ள ஆண்டுகளில் அந்தந்த ஆண்டு முடிவில் வேலைவாய்ப்பு நிறுவனங்களின் நடப்புப் பதிவேடுகளில் வேலையற்றவர்களாகப் பதிவு செய்யப் பெற்றிருந்தவர்களின் மொத்த எண்ணிக்கை பின்வருமாறு:—

1968	1,76,930
1969	3,54,924
1970	4,01,533
1971	4,60,676

(இ) ஆம்.

(உ) படித்தவர் படிக்காதவர்களிடையே நிலவும் வேலைவாய்ப்பின்மை பிரச்சினையைத் தீர்ப்பதற்கான திட்டம் தேசீயத் தன்மை வாய்ந்த பொதுவான வேலைவாய்ப்புக் கொள்கையையும், முதலீடு செய்வதற்குக் கிடைக்கக்கூடிய வள வாயில்களையும் சார்ந்ததாகும். இப்பிரச்சினையைப் பொருளாதார வரிவிதிப்புக் கொள்கைகளினின்றும் தனியே பிரித்துப் பரிசீலனை செய்ய இயலாது. நீண்ட கால அடிப்படையிலேயே இப்பிரச்சினையைத் தீர்க்கவியலும். மத்திய அரசும் மாநில அரசும் வேலைவாய்ப்பின்மைப் பிரச்சினையை நன்கு அறிந்துள்ளன. வரும் ஆண்டுகளில் இப்பிரச்சினை கணிசமான அளவு குறைந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு கே. எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே, 'எம்பிளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் ஒவ்வொரு ஆண்டும் பதிவான நம்பர் என்று சொன்னார்கள். எந்தெந்த ஆண்டு, எத்தனை எத்தனை பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டது என்பதைச் சொல்ல முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, அந்த விவரங்கள் என்னிடத்தில் இப்போது இல்லை.

MR. CHAIRMAN : The hon. Member may put a separate question.